**அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம், லோறன்ஸ்கூக்**
**ANNAI POOPATHI TAMILSK KULTURSENTER, LØRENSKOG**
**ANNAI POOPATHI TAMIL CULTURAL CENTER, LØRENSKOG**

# பெற்றோருக்கான வாராந்தத் தகவல்கள்!

*கிழமை இல. 42 - 2023*

**கல்வி - 21.10.2023 சனிக்கிழமை - 09:30 -12:30 (10:45 - 11:15)**

வழமையான நேரத்தில் வழமைபோல் நடைபெறும்.

**அனைத்துலக அறிவாடல் போட்டி 2023**

***நாடளாவிய போட்டிக்குத் தெரிவான எமது வளாக மாணவர்களின் விபரம் வருமாறு.***

இறுதிப்போட்டி 21.10.2023 அன்று தமிழர் வள ஆலோசனை மையத்தில் நடைபெறும். பங்கேற்கவுள்ள அனைத்து மாணவர்களுக்கும் எமது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**கலைவகுப்புகள் - 21.10.2023 சனிக்கிழமை** - வழமைபோல் நடைபெறும்.

மாற்றங்கள் இருப்பின் கலை ஆசிரியர்கள் தங்களுக்கு நேரடியாக அறிவிப்பார்கள்.

**நவராத்திரி விழா 2023**

அழைப்பிதழ், நவராத்திரி விழாவிற்கான நிகழ்ச்சிநிரல் இவ்வாராந்தத் தகவல்களுடன் இணைக்கப்பட்டுள்ளது.

நவராத்திரி விழாவிற்கான மாணவர்களின் நிகழ்ச்சிகளை ஆசிரியர்கள் தயார்படுத்திவருகின்றனர். அதனை திறம்பட நடாத்துவதற்கு அனைத்து பெற்றோரும் ஒத்துழைக்கும் வண்ணம் வேண்டுகின்றோம்.

**எமது வளாக இக்கல்வியாண்டில் (2023 - 2024) நடைபெறவுள்ள நிகழ்வுகள்**

| | |
|---|---|
| நவராத்திரி விழா | - 28.10.2023 (அழைப்பு & நிகழ்ச்சிநிரல் இவ்வாராந்தத் தகவலுடன்). |
| பல்லினகலாச்சார ஒன்றுகூடல் | - 29.10.2023 (வாராந்தத் தகவல் கிழமை 41 இல் பார்க்கலாம்). |
| ஆண்டுக்கூட்டம் பகுதி 2 | - 11.11.2023 (நிகழ்ச்சிநிரல் விரைவில் அனுப்பப்படும்). |
| நத்தார்விழா | - 16.12.2023 |

**தேநீர்ச்சாலை** - இயங்குநிலையில் இருக்கும்.

*பெற்றோர் மற்றும் பாதுகாவலரின் முக்கிய கவனத்திற்கு!*

தாங்கள் தாங்கள் பயன்படுத்திய உணவுப்பொருட்கள் மற்றும் தேநீர்க் குவளைகள் அனைத்தையும் குப்பையிலிட்டு இடங்களைச் சுத்திகரித்துச் செல்லுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நிதி 2023

அன்னையினால் தனிப்பட்ட முறையில் அனுப்பப்பட்ட அங்கத்துவக் கட்டணத்தினை சிலர் இன்னும் செலுத்தவில்லை என்ற தகவல் கிடைத்துள்ளது. எனவே இதுவரை செலுத்தாமல் இருந்தால் அதனை விரைவில் செலுத்தும்படி வேண்டிக்கொள்கின்றோம். **அக்கட்டணத்தினையும் செலுத்தியவர்கள் மட்டுமே முழுமையான உறுப்பினர் உரிமையைப் பெற்றவர்களாவர் என்பதனை அறியத்தருகின்றோம்.**
ஐயப்பாடுகள் இருப்பின் நிதிப்பொறுப்பாளருடன் மின்னஞ்சல் மூலம் தொடர்புகொள்ளவும்.
jude@annai.no

*எமது வளாக நிர்வாகச் செயற்பாடுகளில் அல்லது எம்மால் வழங்கப்படும் தகவல்களில் தெளிவின்மை அல்லது சந்தேகங்கள் இருப்பின் வளாகப்பொறுப்பாளருடன் நேரடியாகத் தொடர்புகொள்வதன் மூலம் தேவையற்ற ஊகங்களைத் தவிர்த்துக்கொள்ளலாம்.*

நன்றி!

நிர்வாகம்
அன்னை பூபதி லோறன்ஸ்கூக் வளாகம்

தமிழை வளர்க்கப்
பணிபுரிவோம்!